# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109766

1. District : மாவட்டம் Thoothukudi PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Thoothukudi Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 01/2023 Date நாள் 23.01.2023
2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 13.01.2023 at about 13.00 hrs and 23.01.2023 at about 11.00 hrs
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.01.2023 Time : நேரம் 17.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.01.2023 Time : நேரம் 17.30 hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 65 Kms North West
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Assistant Engineer, Distribution, TANGEDCO/TNEB Ltd, Nalattinpudur And O/o the Assistant Divisional Engineer, TANGEDCO, Kovilpatti.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு.பாரதி சங்கர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் V.முனியசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி Power Agent of மு.சுப்ரமணியன், எண்.107/5, சண்முகசிகாமணி நகர், கோவில்பட்டி - 628501.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.பொன்ராஜ், மின் பொறியாளர், O/o the Assistant Engineer, Distribution, TANGEDCO/TNEB Ltd., நாலாட்டின்புதூர், தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில்/தகவல் கொடுப்பதில் தாமதம் No

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் --

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............M.Sudha..........Inspector of Police on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 23.01.23 | M Sudha 23.01.23.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: **23.01.2023 at 19.00 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ........M. SUDHA........
Rank: நிலை Inspector.....No. எண் ..........
VCU AC, Thoothukudi

**Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.01/2023**

**பணிந்து அனுப்பப்படுகிறது.**

இன்று 23.01.2023-ம் தேதி 17.00 மணிக்கு M.சுதா, தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.M.பாரதி சங்கர் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் தூத்துக்குடி மாவட்டம் நாலாட்டின்புதூர் மின் விநியோகம் மற்றும் பகிர்மான கழக உதவி பொறியாளர் அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.பொன்ராஜ் என்பவர் உயர் மின் அழுத்த கம்பியை மனைப்பிரிவின் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைக்க மதிப்பீடு தயார் செய்து தனது மனுவுடன் மதிப்பீட்டை ERPல் ஏற்றுவதற்கு ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம்) லஞ்சமாக கேட்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நாலாட்டின்புதூர் மின் விநியோகம் மற்றும் பகிர்மான கழக இளநிலை பொறியாளர் அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.பொன்ராஜ் பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 01/2023 பிரிவு 7 (a) of PC Act, 1988 as Amended in 2018 படி 23.01.2023-ம் தேதி மாலை 17.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் மு.பாரதிசங்கர், த-பெ V.முனியசாமி, Power Agent of மு.சுப்ரமணியன், 107/5,சண்முகசிகாமணிநகர், கோவில்பட்டி - 628501. Ph- 9940972175. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை அலுவலகம், தூத்துக்குடி. மதிப்பிற்குரியஐயா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது

சகோதரி மு.அனுசுயா தனது கணவர் திரு.மு.சுப்ரமணியனுடன் அமெரிக்காவில் வசித்து வருகிறார். அமெரிக்காவில் வசிக்கும் எனது மாமா சுப்ரமணியனுக்கு கோவில்பட்டி தாலுகாவில் உள்ள நாலாடின்புத்தூர் கிராமத்தில் சர்வேஎண் 861 1A1Bல் 1ஏக்கர் 19.84 சென்ட் (4850 சமீ) காலி இடம் உள்ளது. அந்த இடத்தை மனைப்பிரிவுகளாக பிரிக்க எனக்கு பவர் பத்திரம் (எண் -7409/2022) அளித்துள்ளார். அதன்படி மேற்படி காலி இடத்தை DTCP அலுவலகம் மூலமாக 23 மனைப்பிரிவுகளாக பிரித்து உத்தரவு பெற்றுள்ளேன். மேற்கூறிய மனைப்பிரிவின் ஊடே உயரழுத்த மின்கம்பி செல்கிறது. அந்த உயர் மின் அழுத்த கம்பியை மேற்படி மனைப்பிரிவின் சாலையின் போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் என பஞ்சாயத்து தலைவர் எங்களிடம் கூறினார். நானும் நாலாடின்புத்தூர் மின்வாரிய அலுவலகத்தை 11.1.2023 அன்று விண்ணப்பம் அளிக்க சென்றேன். அங்கு நாலாடின்புத்தூர் மின் பொறியாளர் திரு.பொன்ராஜ் அவர்களை சந்தித்து என்னுடைய 11.01.2023 தேதிய மனுவை கொடுத்தேன். பொதுவாக மின்வாரிய அலுவலகத்தில் மனுவைப் பெற்று அதற்குரிய கட்டணங்களை வசூல் செய்து மனுவை பதிவு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நான் அவரிடம் இது குறித்துக் கேட்டும் மின் பொறியாளர் பொன்ராஜ் எதுவும் சொல்லவில்லை. மீண்டும் நான் 13.1.2023 அன்று மதியம் சுமார் 1 மணிக்கு நாலாடின்புத்தூர் அலுவலகம் சென்று பொன்ராஜ் அவர்களிடம் எனது விண்ணபத்திற்கு எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் இவ்வாறு சும்மா கேட்டால் நடவடிக்கை எடுக்க இயலாது என்றும் அதற்கு இரசீது வழங்கி மதிப்பீடு தயார் செய்து மனுவுடன் மதிப்பீட்டை ERPல் ஏற்றுவதற்கு ரூபாய் 10000 இலஞ்சமாக தரவேண்டும் என்று கேட்டார். நான் என்னிடம் இப்போது அவ்வளவு பணம் இல்லை என்றும் இரசீது போட்டு தாருங்கள் பின்னர் பார்த்துக் கொள்ளளாம் என்றும் வேறு வழியின்றி சொன்னேன். உடனே அலுவலகத்தில் சொல்லி எனது விண்ணபத்திற்கு ரூபாய் 236 வாங்கிக் கொண்டு இரசீது கொடுத்தார். அன்று இரசீதை கொடுத்து விட்டு ERPல் ஏற்றிவிடுகிறேன் என்று சொன்னார். ஆனால் இன்று 23.1.2023 காலை வரை நாலாடின்புத்தூர் மின்வாரிய அலுவலகத்தில் இருந்து ERP ல் ஏற்றியது தொடர்பான தகவல் ஏதும் எனக்கு கிடைக்காததால் அது பற்றி கேட்பதற்காக நாலாடின்புத்தூர் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு பொன்ராஜ்

அவர்கள் இல்லை. அலுவலகத்தில் விசாரித்ததில் தூத்துக்குடி SE அலுவலகத்தில் நடக்க இருக்கும் Meeting ற்கு செல்வதற்காக கோவில்பட்டி EE அலுவலகத்திற்கு சென்றுள்ளார் என்று சொன்னார்கள. உடனே நான் அங்கிருந்து கிளம்பி காலை 11 மணிக்கு கோவில்பட்டி EE அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த நாலாடின்புத்தூர் மின் பொறியாளர் பொன்ராஜ் அவர்களைப் பார்த்து எனது மனுவை ERP ல் ஏற்றுவது தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்டபணம் தராமல் ERP ல் ஏற்ற முடியாது என்று சொன்னார். அதற்கு என் மாமா பணம் எதுவும் அனுப்பவில்லை மனைகள் விற்றால் தான் எனக்கும் பணம் கிடைக்கும் என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியா நான் கேட்ட ரூபாயில் 5000 குறைத்து ரூபாய் 5000த்தை நாளை காலை நாலாடின்புத்தூர் மின்வாரிய அலுவலகத்தில் என்னிடம் கொடுங்கள் என்று கண்டிப்பாக சொன்னார். மேலும் நாளை Shutdown என்பதால் அலுவலகத்தில் தான் இருப்பேன் என்றும் சொன்னார். நானும் சரி என்று சொல்லி விட்டு வந்து விட்டேன். யோசித்துப் பார்த்ததில் எனக்கு மின் பொறியாளர் பொன்ராஜ்க்கு இலஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் இலஞ்சமாக ரூபாய் 5000 கேட்ட மின் பொறியாளர் பொன்ராஜ் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், நான் 11.01.2023 அன்று கொடுத்த விண்ணப்பத்தின் நகல், 13.01.2023 அன்று பெற்ற இரசீது நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு xxxxxx s/d., (மு.பாரதிசங்கர்), நாள் 23.01.2023. Sir, Received by me on 23.01.23 at 17.00 hrs & verified the antecedents of both the complainant and the Accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range and I registered a case in Thoothukudi V&AC Cr.No.01/23 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 17.30 hrs. xxxxxx s/d., 23.1.2023 (M.SUDHA), Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு ஆகியவற்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

M Sudha 23.01.23.
(M. SUDHA)
Inspector of Police,
V&AC, Thoothukudi